**Starting time 1.42 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.296/2009**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 05.09.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : நல்லமுத்து | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>1-</u>**<u>ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u> எந்த கிரயப் பத்திரம் சம்பந்தமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், துரைசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரயப் பத்திரம் சம்பந்தமாக சாட்சியம் அளிக்கிறேன். யார் யார் கிரயம் செய்து கொடுத்தோம் என்றால், நானும், என் தம்பி ராஜகோபாலும் கிரயம்செய்த கொடுத்தோம். அந்த பத்திரம் எழுதுவதற்கு முன்பாக கிரயம் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோமா என்றால், இல்லை. எந்த தேதியில் கிரயம் ஏற்படுத்தப்பட்டது என்றால், கிரயம் செய்து கொடுத்து, 25, 26 ஆண்டுகளாகிறது தேதி நினைவில் இல்லை. பத்திரயம் ஏற்படுத்திய தேதியன்று துரைசாமியின் தகப்பனார் உயிருடன் இல்லை என்றால், ஆமாம். அவர் 29.06.1998 தேதியன்று அவர் இறந்தார் என்றாலும், அவர் இறந்து 5 மாதங்கள் கழித்துதான் கிரயம் ஏற்படுத்திக்கொடுத்தோம் என்றாலும், ஆமாம்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால், ஆமாம். 14.03.1998 தேதியன்று நானும், ராஜகோபாலும் சேர்ந்து துரைசாமிக்கு ஏற்படுத்திய கிரய ஒப்பந்தம்தான் தற்போது என்னிடம் காட்டப்படும்

ஆவணமா என்றால், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான், கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தினோமா என்று ஞாபகம் இல்லை. துரைசாமியின் தகப்பனார் இறந்த பிறகுதான் நான் கிரய ஒப்பந்தத்தையும், கிரய ஆவணத்தையும் துரைசாமிக்கு ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல, துரைசாமி, தம்பி, தாயார் ஆகியோர் சேர்ந்துதான் பணம் கொடுத்தார்கள். துரைசாமி மட்டும்தான் எங்களிடம் ஒப்பந்தம் போட்டு எங்களிடம் பணம் கொடுத்து கிரயம் பெற்றுக்கொண்டார் என்றால், இல்லை, கிரய ஆவணத்திலும் துரைசாமி மட்டும்தான் பணம் கொடுத்து கிரயம் ஏற்படுத்திக் கொண்டதாக உள்ளது என்றாலும், பத்திரத்திற்கு முரணாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

3. துரைசாமி மட்டும்தான் கிரய தேதியன்று என்னிடமிருந்து சுவாதீனம் பெற்றுக்கொண்டார் என்றாலும், துரைசாமிக்கு எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால், அவர் சொத்தை இளங்கோவிற்கு விற்றுவிட்டதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் எனக்காகவும் என் மகள்கள் மலர் மற்றும் தேவி ஆகியோரின் பாதுகாவலர் என்ற முறையிலும், என் சகோதரர் ராஜகோபாலுடன் சேர்ந்து துரைசாமிக்கு கிரயம் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால், ஆமாம். அந்த கிரயப் பத்திரத்தில் ராமசாமி நாயுடு மகன் சீனிவாசன், சாந்தலிங்க நாயக்கன் மகன் சோமசுந்திரம் ஆகியோரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால், ஆமாம். துரைசாமி இளங்கோவிற்கு கிரயம் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு அவரது தாயாருடன் சேர்ந்து கொண்டு வழக்கு நடத்தி வருகிறார் என்றாலும், நான் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. இந்த வழக்கையே துரைசாமி சொல்லிதான் வாதி தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அந்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும், சரியல்ல, அனைவரும் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள்.

<u>**2-**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u> நான் இருக்கும் இடத்திற்கு எந்த பக்கத்தில்

வாதி உள்ளார் என்றால், திருச்சி செல்லும் பிரதான சாலைக்கு மேற்குபுறத்தில் இருக்கிறார். வாதியும் துரைசாமியும் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால், அவர்களது வீட்டில் குடியிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் ஒன்றாக குடியிருக்கிறார்களா என்றால், துரைசாமி திருமணத்திற்கு பின்னிட்டு அவரது மனைவியுடன் ஒன்றாக வசிக்கிறார், வாதியும் அவரது மகன் பண்டும் ஒன்றாக வசிக்கிறார்கள். நான் விற்ற சொத்தை தற்போது யார் பயிர் செய்து வருகிறார்கள் என்றால், வாதியும், துரைசாமியும், அவரது தம்பியும் பயிர் செய்கிறார்கள். இளங்கோவன் எங்கே இருக்கிறார் என்றால், பஜனைமடத்திற்கு கிழக்கில் செந்தாரப்பட்டியில் குடியிருக்கிறார். நான் துரைசாமிக்கு கிரயம் கொடுத்த சொத்தை எப்போதாவது இளங்கோவன் அனுபவித்தாரா என்றால், இல்லை.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 02.02 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.